Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 047 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 17.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# வெளிநாட்டுப் பயணங்களுக்கு கூடுதல் வரி விதிப்பா? பிரதமர் மோடி மறுப்பு



புது டெல்லி: வெளிநாட்டுப் பயணங்களுக்கு வரி அல்லது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக வெளியான ஊடகசெய்தி முற்றிலும் பொய்யானது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி ஐரோப்பிய நாடுகளுக்கு 6 நாள் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த பயணத்தில் அவர் நெதர்லாந்து, சுவீடன், நார்வே,

இத்தாலி உள்ளிட்ட 5 நாடுகளுக்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளார்.

இந்த பயணத்துக்கு முன்பு ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நேற்று சென்றார். இதற்காக பிரதமர் மோடி தனி விமானம் மூலம் அமீரகம் புறப்பட்டு சென்றார். அமீரக வான் வெளியில் பிரதமரின் விமானம் நுழைந்த போது அமீரகத்தின் எப்.16ரகராணுவ விமானங்கள் சூழ பாதுகாப்புடன் அழைத்து செல்லப்பட்டார்.

அபுதாபி விமான நிலையத்தில் பிரதமர் மோடியை அமீரக அதிபர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் நேரில் வரவேற்றார். அப்போது முப்படையினரின் ராணுவ அணிவகுப்பு மரியாதையை பிரதமர் மோடி ஏற்றுக் கொண்டார். சுமார் 2 1/2 மணி நேர அமீரக பயணத்தில் முக்கியமாக அமீரக அதிபருடன் மோடி பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது இரு தலைவர்களும் எரிசக்தி ஒத்துழைப்பு. வர்த்தகம், முதலீடு, பொருளாதார கூட்டாண்மை மற்றும் பிரதேச நிலவரம் ஆகியவை குறித்து பேசினர்.

மேலும் இந்தியா–அமீரகம் இடையேயான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத் துவது, நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெறுவது குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக இரு நாடுகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டு பொருளாதார ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகரித்துள்ள பலன்கள் குறித்து பேசப்பட்டது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாக உலகளாவிய எரிசக்தி வினியோ கத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்த பிரச்சினையை தீர்ப்பது குறித்து முக்கியமாக பேச்சு வார்த்தை நடந்தது.


தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களின் முன்னிலையில், இரு நாடுகளுக்கு இடையே ராணுவம், எரிசக்தி பாதுகாப்பு, கப்பல் பழுது நீக்கும் தளம் ஏற்படுத்துவது உள்ளிட்ட 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

வெளிநாட்டுப் பயணங்களுக்கு வரி, செஸ் அல்லது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், ஆனால் இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் ஊடக நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதற்கு மறுப்பு தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த செய்தி முற்றிலும் பொய்யானது. இதில் ஒரு துளிகூட உண்மை இல்லை. வெளிநாட்டுப் பயணங்களுக்கு இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் கேள்விக்கே இடமில்லை. நமது மக்கள் வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குவதையும், வாழ்வதை எளிதாக்குவதையும் மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். ஒரு ஊடகச் செய்தியை பிரதமரே மறுப்பது அரிதான நிகழ்வாகும்.

தொடர்ந்து நடைபெற்று வரும் மேற்காசிய மோதலின் காரணமாக, பொருளாதாரத்தை வலுப்படுத்த எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் தங்கம் வாங்குவதை ஒத்திவைத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்கு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு விடுத்திருந்தார். இதனை தொடர்ந்து தங்கம் மீதான இறக்குமதி வரி சில நாட்களுக்கு முன்பு உயர்த்தப்பட்டது. மேலும்,பெட்ரோல்,டீசல் விலையும் லிட்டருக்கு ரூ.3 என வெள்ளிக்கிழமை அன்று உயர்த்தப்பட்டது.

# புகாருக்குள்ளான வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்: தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்



சென்னை:

சட்டப்பேரவைத் தேர்தலின் போது புகாருக்குள்ளான வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும் என தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை கடந்த மே 4-ம் தேதி 62 வாக்கு எண்ணும் மையங்களில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணுகை முகவர்களின் முன்னிலையில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுள்ளது. வாக்கு எண்ணும் நடைமுறையின்போது வேட்பாளர்களும், தேர்தல் முகவர்களும் இருந்தனர். வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரால் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்த பின்னர், வேட்பாளர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில், கண்காணிப்பு கேமரா மற்றும் பாதுகாப்பு கண்காணிப்பின் கீழ், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரி பார்க்கும் கருவிகளிலிருந்து அவற்றின் சீட்டுகள் வெளியே எடுக்கப்பட்டு, சட்டப்படியான ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ள காப்பறையில் கருப்பு நிற உறைகளுக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் காப்பறையில் பாதுகாப்பாக வைப்பதற்கு முன்னர், வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடி முத்திரையிடப்பட்டுள்ளன.

தேர்தல் புகார் மனுக்களின் பட்டியலை சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றம் இறுதி செய்யும் வரை, இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு நெறிமுறையின்படி, காப்பறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும். தேர்தல் புகார் மனு குறித்த நேர்வில், தேர்தல் புகார் மனு இறுதியாக தீர்வுசெய்யப்படும் வரையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை மற்றும் திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

திருச்சி: தமிழகத்தில் காற்று சுழற்சியுடன் கூடிய வெப்பச் சலனம் காரணமாக சென்னை மற்றும் திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் காலையில் வெயிலும், மாலையில் இடியுடன் கூடிய மழையும் பெய்யும் என்று தன்னார்வ வானிலை ஆய்வாளர் செல்வக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: வங்கக்கடலில் உருவாகி இருக்கும் தீவிர தாழ்வுப்பகுதி தொடர்ந்து தமிழகத்தின் அருகிலேயே நீடித்து கொண்டிருக்கிறது. இது மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதியில் நீடிக்கக்கூடிய காற்று சுழற்சியுடன் இணைந்து காணப்படுகிறது.

இருவேறு நிகழ்வுகளும் தமிழகத்தையொட்டி வங்கக்கடல் பகுதிக்கு நெருக்கமாக வந்து செயலிழந்து மேற்கு நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக கடந்த 2 நாட்களாக கடலோர மாவட்டங்களில் தொடர் மழை நீடித்த நிலையில், சென்னை உள்ளிட்ட வட கடலோரமும் இம்மழை எட்டியுள்ளது.

இதனிடையே குமரிக்கடல் காற்று சுழற்சி காரணமாக கோவை உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழை தொடர்கிறது. (மே 16) செயலிழந்த காற்று சுழற்சி மேற்கு நோக்கி நகரும்போது தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும் ஆங்காங்கே மழை பெய்யும். கடலோரமும் அவ்வப் போது மழை தொடரும். நாளை (மே 17) முதல் கேரளா, மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகள், கன்னியாகுமரி முதல் நீலகிரி வரை மழை தீவிரமடையும்.

உள் மாவட்டங்கள் முதல் கடலோர மாவட்டங்கள் வரை மழை இருக்கும். மேற்கு மாவட்டங்களில் பரவலாக மழை இருக்கும். கடலோர பகுதிகளில் இரவு, நள்ளிரவு நேரங்களில் ஆங்காங்கே மழை இருக்கும்.



**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தங்கம் விலை தொடர் சரிவு; வெள்ளி விலையும் குறைந்தது

சென்னை:

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் (மே 16) பவுனுக்கு ரூ.120 என குறைந்துள்ளது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் கிலோவுக்கு ரூ.15,000 குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்நிலையில், கடந்த 13-ம் தேதி அன்று தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் என



மத்திய அரசு உயர்த்தியது. அதையடுத்து அன்றைய தினம் மட்டும் தங்கம் விலை கிராமுக்கு ரூ.670 உயர்ந்தது. தொடர்ந்து 14-ம் தேதி அன்று கிராமுக்கு ரூ.50 என தங்கம் விலை உயர்ந்தது. இந்த சூழலில் (மே 15) தங்கம் விலை கிராமுக்கு ரூ.285 என குறைந்தது.

இந்த சூழலில், தங்கம் விலை தொடர்ந்து இரண்டாவது நாளாக இன்று மீண்டும் குறைந்துள்ளது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று கிராமுக்கு ரூ.15 குறைந்து ஒரு கிராம் ரூ.14,750-க்கும், பவுனுக்கு ரூ.120 குறைந்து ஒரு பவுன் ரூ.1,18,000-க்கும் விற்பனையாகிறது.

24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.136 என விலை குறைந்து, ஒரு பவுன் ரூ.1,28,728-க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் கிராமுக்கு ரூ.15 குறைந்து, ஒரு கிராம் ரூ.290-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.15,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,90,000-க்கும் விற்பனையாகிறது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# "லண்டனில் உள்ள போஜ்சாலா சரஸ்வதி சிலையை மீட்க நடவடிக்கை" ம.பி. முதல்வர் உறுதி



புதுடெல்லி: லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள போஜ்சாலாவின் சரஸ்வதி சிலையை கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும் என மத்தியப்பிரதேச முதல்வர் மோஹன் யாதவ் தெரிவித்துள்ளார்.

11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தார் நகரிலுள்ள போஜ்சாலா. இந்திய தொல்லியல் ஆய்வகத்தின் கீழ் உள்ளது. இதை முஸ்லிம்கள் மவுலானா கமலூத்தீன் மசூதி எனவும், இந்துக்கள் வாக் (சரஸ்வதி) தேவி கோயில் என்றும் கூறி வந்தனர்.

இந்த பிரச்சினை பல்வேறு வழக்குகளாகி, ம.பி மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டிருந்தது. இதன் மீதான உச்ச நீதிமன்ற வழக்கில் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, ம.பி உயர் நீதிமன்றத்தின் இந்தோர் அமர்வு அனைத்து மனுக்களையும் விசாரித்தது. நேற்று வெளியான இதன் தீர்ப்பில் போஜ்சாலா ஒரு வாக் தேவி கோயிலே எனவும், முஸ்லிம்கள் நடத்தி வரும் தொழுகை அங்கு நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டு ள்ளது.

இத்துடன், லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள வாக் தேவி சிலையை கொண்டுவந்து போஜ்சாலாவில் நிறுவப்பட வேண்டும் என்றும்உயர்நீதிமன்றம் அறிவிறுத்தி இருந்தது. இதன் மீது கருத்து கூறிய பாஜக ஆளும் ம.பி முதல்வர் மோஹன் யாதவ், வாக் தேவி சிலையை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ம.பி முதல்வர் மோஹன் யாதவ் கூறுகையில், "மன்னர் போஜ், வாக் தேவியின் (சரஸ்வதி) திருவுருவத்தின் மூலம் இவ்விடத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்டினார். இதை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

எனவே, போஜ்சாலாவின் பெருமையை மீட்டெடுக்கும் வகையில், வெளிநாட்டிலிருந்து வாக்தேவி சிலையைத் திரும்பக் கொண்டுவருவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்படும்.

அயோத்தி கோயில் மீதான நீதிமன்றத் தீர்ப்பு, சமூக நல்லிணக்கத்திற்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் அமைந்தது. அந்த மரபைப் பின்பற்றி, போஜ்சாலா தீர்ப்பையும் ஏற்பதன் மூலம் மத்தியப் பிரதேசம் சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும்." எனத் தெரிவித்தார்.

இந்த தீர்ப்பின் மீது பாஜகவின் தோழமை அமைப்பான விஷ்வ இந்து பரிஷத்தின் சர்வதேசத் தலைவர் அலோக் குமார், 'போஜ்சாலா மீதான இந்தத் தீர்ப்பு, இந்தியாவின் கலாச்சார உணர்வு, உண்மை மற்றும் சனாதன மரபு ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்ட ஒரு முக்கிய அங்கீகாரம்.

இந்தத் தீர்ப்பானது முறையான நீதித்துறை செயல்முறைகளைப் பின்பற்றியே வெளியாகி உள்ளது. இந்த போஜ்சாலா என்பது சரஸ்வதி தேவிக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பழமையான கோவில் எனவும், சமஸ்கிருத கல்விக்கான மையமாகவும்திகழ்ந்தது என்றும் நீதிமன்றம் முடிவெடுத்துள்ளது.

இதற்கான அடிப்படை, அதன் மீதான வரலாற்று ஆவணங்கள், தொல்லியல் சான்றுகள் மற்றும் அங்கு தொடர்ந்து நடைபெற்று வந்த இந்து வழிபாட்டு மரபு ஆகியவை. எனவே, பொதுமக்கள் இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்." எனக் கூறி உள்ளார்.

இவ்வழக்கில் இந்து தரப்பிலான முக்கிய மனுதாரரான ஆஷிஷ் கோயல், 'வரலாற்றுச் சூழல்களின் காரணமாகவே போஜ்சாலாவில் தொழுகை நடத்தும் வழக்கம் உருவானது. இந்த உண்மையை நிலைநாட்டுவதற்காகத் தானும் தனது முன்னோர்களும் நீண்ட காலமாகப் போராடி வந்தோம்." எனக் குறிப்பிட்டார். இந்த வழக்கில் ம.பி.யின் முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான திக்விஜய் சிங் கூறுகையில், "போஜ்சாலா என்பது இந்தியத் தொல்லியல் துறையின் பாதுகாப்பில் உள்ள ஒரு வரலாற்றுச் சின்னம்.

அத்தகைய வரலாற்றுச் சின்னத்திற்குள் இந்து முறைப்படி பூஜையோ அல்லது இஸ்லாமிய முறைப்படி தொழுகையோ நடத்த அனுமதிக்கப்படுமா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கே உண்டு.

வாரணாசியில் உள்ள கியான்வாபி மசூதி, சம்பலில் உள்ள ஷாஹி ஜாமா மசூதி மற்றும் மதுராவில் உள்ள கிருஷ்ண ஜென்மபூமி - ஷாஹி ஈத்கா ஆகிய இடங்கள் தொடர்பான வழக்குகள் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன." என அவர் குறிப்பிட்டார்.

வாக் தேவி சிலையின் விவரம்:

இந்தூர் நீதிமன்ற விசாரணையின் போது, 1875 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் அரசின் அரசியல் பிரதிநிதியான மேஜர் ஜெனரல் வில்லியம் கைக், அக்கோவில் வளாகத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார் என்பது தெரியவந்தது.

இந்த அகழ்வாராய்ச்சியில் அங்கு புதைக்கப்பட்டிருந்த வாக்தேவி அம்மனின் சிலை கண்டெடுக்கப்பட்டது. இச்சிலையை 1903 இல், கர்சன் பிரபு தன்னுடன் எடுத்துச் சென்று, லண்டனில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் வைத்தார்.

அன்று முதல் அந்த சிலை அங்கேயே இருந்து வருகிறது. வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, நான்கு கரங்களைக் கொண்டிருக்கும் அச்சிலையின் கிரீடமும், நேர்த்தியாக அமைக்கப்பட்ட சிகை அலங்காரமும் அதன் தெய்வீகத்தையும் மாண்பையும் பிரதிபலிக்கின்றன.

அச்சிலையின் அடிப்பாகத்தில் சமஸ்கிருத மொழியிலும் தேவநாகரி எழுத்துருவிலும் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு உள்ளது. இதில், வரருச்சி எனும் அறிஞர், வாக்தேவி அம்மன் சிலை உட்பட மூன்று சிலைகளைச் செதுக்குமாறு பணித்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது லண்டன் அருங்காட்சியகத்தினுள் உள்ள இச்சிலை ஏறத்தாழ 128.5 செ.மீ உயரமும், 58.6 செ.மீ அகலமும் கொண்டது. இதன் எடை சுமார் 250 கிலோ இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# நீட் தேர்வை கைவிடவேண்டும்: திருமாவளவன் வலியுறுத்தல்



சென்னை: நீட் தேர்வை முற்றாகக் கைவிடவேண்டும் என விசிக தலைவர் திருமாவளவன் வலியுறுத்தி அவர் வெளியிட்ட அறிக்கை: இளநிலை மருத்துவக் கல்விக்கான (எம்பிபிஎஸ்) நுழைவுத் தேர்வு (நீட்) கடந்த மே 3-ம் நடைபெற்றது. ஆனால் அந்த தேர்வுக்கான வினாத்தாள்கள் தேர்வுக்கு முன்னரே கசிந்தது. அந்தத் தேர்வு செல்லாதென கடந்த மே 13 அன்று தேசியத் தேர்வு முகமை அறிவித்துள்ளது. அதனையடுத்து அதே தேர்வு ஜூன் 21 அன்று மீண்டும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வே வேண்டாமென தொடக்கத்திலிருந்தே விசிக வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில் இதனைக் கண்டித்தும், நீட் தேர்வு முறையை முற்றாகக் கைவிட வேண்டுமென வலியுறுத்தியும் தமிழகம் தழுவிய அளவில் தி.க. ஒருங்கிணைக்கும் ஆர்ப்பாட்டங்களில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் பங்கேற்கிறது.

சென்னையில் விசிக சார்பில் நான் கலந்து கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



தீ விபத்து ஏற்ப டும் நேரங்களில் அதை எவ்வாறு கையாளுவது குறித்து ஒத்திகை நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது.

# கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம்: சுற்றுலா பயணிகள் செல்ல தடை



திண்டுக்கல்: கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பதால் சனிக்கிழமை ) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் பேரிஜம் ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளது. இதனால் வனத்துறையினரிடம் அனுமதி பெற்றே சுற்றுலாப் பயணிகள் செல்லமுடியும். பேரிஜம் ஏரிக்கு செல்லும் வழியில் தொப்பி தூக்கிப் பாறை, மதிகெட்டான் சோலை, வியூ பாய்ண்ட், அமைதி பள்ளத்தாக்கு உள்ளிட்ட இடங்களை பார்க்கலாம்.

இந்நிலையில் (மே 16) காலை முதல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அங்கு செல்வதற்கு சனிக்கிழமை (இன்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை வனத்துறை தடை விதித்துள்ளது. அதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறும் போது, புலிகள் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். புலிகள் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்றதும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர் என்றனர்.

# ஐஎஸ்ஐஎஸ் இரண்டாம் நிலை தளபதி ஆப்பிரிக்காவில் கொலை: அமெரிக்க அதிபர் ட்ரம்ப்அறிவிப்பு



வாஷிங்டன்: 'அமெரிக்கராணுவம், நைஜீரிய ஆயுதப் படைகளுடன் இணைந்து செயல்பட்டு, உலகளாவிய பயங்கரவாத அமைப்பான ஐஎஸ்ஐஎஸ்-ன் இரண்டாம் நிலைத்தளபதி கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், "இன்று இரவு, எனது நேரடி உத்தரவின் பேரில், துணிச்சலான அமெரிக்கப் படைகளும் நைஜீரிய ஆயுதப் படைகளும் இணைந்து, உலகின் மிகவும் தீவிரமான பயங்கரவாதியை போர்க்களத்திலிருந்து அகற்றுவதற்கான, மிகதுல்லியமாக திட்டமிடப்பட்ட மற்றும் மிகவும் சிக்கலான ஒரு பணியை சிறப்பாக நிறைவேற்றின.

உலக அளவில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் இரண்டாம் நிலைத் தளபதியான அபு-பிலால் அல்-மினுகி, ஆப்பிரிக்காவில் தன்னால் பதுங்கிக்கொள்ள முடியும் என்று நினைத்தார்; ஆனால் அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது குறித்த தகவல்களை தொடர்ந்து அளிக்கும் உளவாளிகள் எங்களிடம் இருப்பதை அவர் அறியவில்லை.

அவர் இனி ஆப்பிரிக்க மக்களை அச்சுறுத்தவோ அல்லது அமெரிக்கர்களை இலக்காகக் கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிடவோ உதவ மாட்டார். அவர் கொல்லப்பட்டதன் மூலம், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் உலகளாவிய செயல்பாடுகள் பெருமளவில் முடங்கியுள்ளன. இந்த நடவடிக்கையில் எங்களுடன் இணைந்து செயல்பட்டதற்காக நைஜீரிய அரசாங்கத்திற்கு நன்றி. கடவுள் அமெரிக்காவை ஆசீர்வதிக்கட்டும்," என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 2023-ல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அரசு, அபு-பிலால் அல்-மினுகியை 'உலகளாவிய பயங்கரவாதி' என்று அறிவித்தது. அபுபக்கர் மைனோக் மற்றும் அபோர் மைனோக் உள்ளிட்ட பல புனைப்பெயர்களைக் கொண்டு இவர் செயல்பட்டு வந்தார்.

# ஆயுதப்படை தலைமையகத்தில் அலுவலக உதவியாளரை தாக்கிய பெண் டிஐஜி: விசாரணை நடத்தி அறிக்கை தர உத்தரவு



சென்னை: சென்னையில் இயங்கி வரும் ஆயுதப்படை தலைமையகத்தில் அலுவலக உதவியாளரை பெண் டிஐஜி தாக்கியதாகக் கூறப்படும் விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக காவல் துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அதில் முக்கியமான பிரிவுகளில் ஒன்று ஆயுதப்படை. கலவரம், அசாதாரண சூழல் அல்லது வன்முறை ஏற்படும் நேரங்களில் அவற்றை ஒடுக்க இந்த படை பயன்படுத்தப்படுகிறது.

மேலும், விஐபிக்கள் வருகை, திருவிழாக்கள், பண்டிகைகள் மற்றும் பெரிய பொதுக்கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், கைதிகளை சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லுதல், சட்டம் - ஒழுங்கு பணியில் போலீஸாருக்கு உதவியாக செயல்படுதல் உட்பட பல்வேறு பணிகளை ஆயுதப் படை பிரிவு போலீஸார் மேற்கொள்கின்றனர். இப்பிரிவின் தலைமை அலுவலகம் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளது.

இங்கு டிஐஜி-யாக பெண் ஐபிஎஸ் அதிகாரி ஒருவர் உள்ளார். அவர் மன அழுத்தத்துக்கு சிகிச்சை பெற்றதாக கூறப்படுகிறது. மேலும் உடல் நலமும் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் அவரை போலீஸ் உயர் அதிகாரிகள் மிக முக்கியப் பணிகளில் அமர்த்தாமல் ஆயுதப் படைப் பிரிவில் பணியாற்ற அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.

கோப்புகளை வீசி

இவர் பணியில் இருந்தபோது, கோப்பில் கையெழுத்து வாங்க வந்த அலுவலக ஆண் உதவியாளர் (அமைச்சுப் பணியாளர்) ஒருவரது செயல் பெண் டிஐஜி-க்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதாம். இதனால், கோபம் அடைந்த பெண் டிஐஜி, அலுவலக உதவியாளர் மீது கோப்புகளை வீசி எறிந்ததாகவும், காலணியால் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து அந்த அலுவலக உதவியாளர் அவரது சங்க நிர்வாகிகளிடம் முறையிட்டுள்ளார்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட பெண் ஐபிஎஸ் அதிகாரி, டிஜிபி-யிடம் இந்த விவகாரம் தொடர்பாக மனு அளித்துள்ளார்.

இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய டிஜிபி மற்றும் சென்னை காவல் ஆணையர் தனித்தனியாக உத்தரவிட்டுள்ளனர். இதை அடிப்படையாக வைத்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# பிரதமரின் வேண்டுகோளை மீறி வாகன ஊர்வலம்: பாஜக பிரமுகர் மீது ம.பி முதல்வர் நடவடிக்கை



புதுடெல்லி:
எரிசக்தி பயன்பாட்டை மிச்சப்படுத்த வேண்டுமென்ற பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை மீறி மத்தியப் பிரதேசத்தில் வாகன ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது. இதன் மீதான நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட பாஜக பிரமுகருக்கு அம்மாநில முதல்வர்மோகன்யாதவ் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

மேற்காசிய போரின் நெருக்கடி உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. இந்த நெருக்கடியின் மத்தியில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் உயர்ந்துள்ளன. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்ட பிரதமர் மோடி, தங்க நகைகள் வாங்குவதைத் தள்ளிப்போடுமாறும், பெட்ரோல் மற்றும் டீசலை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

இதை ஏற்று மத்திய அமைச்சர்கள் மற்றும் பாஜக ஆளும் மாநில அரசுகள் தங்கள் வாகன பயன்பாட்டை குறைப்பது மற்றும் அத்தியாவசியமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தையும் கடைப்பிடிக்கத் துவங்கி உள்ளனர். இந்நிலையில், மத்தியப் பிரதேச மாநிலத்தின் பாஜக பிரமுகர்சவுபாக்யசிங்தாக்கூர், பிரதமர் மோடியின் வேண்டுகோளைப்புறக்கணித்துவிட்டு,உஜ்ஜயினிலிருந்து போபாலுக்கு நூற்றுக்கணக்கான வாகனங்கள் கொண்ட ஒரு ஊர்வலத்தைவழிநடத்திச் சென்றார்.

இவரை ம.பி முதல்வர் மோகன் யாதவ், அம்மாநிலப் பாடநூல் கழகத்தின் தலைவராக அமர்த்தி இருந்தார். இந்த பொறுப்பை ஏற்பதற்காக சவுபாக்ய சிங் தாக்கூர்சென்றுகொண்டிருந்தார். இந்த காட்சிப்பதிவுகள் உடனான செய்தி ஊடகங்களில் வெளியானது. இதையடுத்து, முதலமைச்சர் மோகன் யாதவ் உத்தரவின் பேரில், சவுபாக்யா சிங்கிடம் விளக்கம் கேட்டுநோட்டீஸ்அனுப்பப்பட்டுள்ளது.

இதில், தேசிய நலன் சார்ந்த வேண்டுகோளைப் புறக்கணித்த தற்காவும், அரசின் வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றாத தற்காகவும் விளக்கம் கேட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சவுபாக்யா சிங்கிற்கு பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. ம.பி அரசின் பாடநூல் கழகத்தின் அலுவலகம் அல்லது வளாகத்திற்குள் சவுபாக்ய சிங் நுழைவதற்கு, மறு உத்தரவு வரும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

கழகத்திற்குச் சொந்தமான எந்தவொரு வசதியையும், வாகனத்தையும், ஊழியரையும் அல்லது அலுவலகத்தையும் அவர் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அவர், கழகம் தொடர்பான எந்தவொரு கூட்டத்திலும் பங்கேற்கவோ அல்லது தலைமை தாங்கவோ முடியாது. கழகத்தின் நிர்வாகம் அல்லது நிதி சார்ந்த முடிவுகள் எதிலும் பங்கேற்பதோ அல்லது கையெழுத்திடுவதோ, மறு உத்தரவு வரும் வரை தடை செய்யப்பட்டுள்ளது.

உ.பி.யில் வாகன ஊர்வலம்: இதனிடையே, உத்தரப்பிரதேசத்தில் பிரதமர் மோடியின் தொகுதியான வாராணாசியிலும் இதேபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. இங்கு மாவட்ட பாஜக தலைவர் ஹன்ஸ்ராஜ் விஷ்வ கர்மா, உ.பி அமைச்சரவையில் புதிய உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரை வாராணாசியில் அவரது கட்சியின் ஆதரவாளர்கள் சுமார் 80 வாகனங்களுடன் வரவேற்றுள்ளனர். இதில், ஆக்கிரமிப்புகளை அகற்ற முதல்வர் யோகி அரசு பயன்படுத்தும் புல்டோசரும் இடம் பெற்றிருந்தது.

இதன் காட்சிப்பதிவை அமைச்சராகி விட்ட ஹன்ஸ்ராஜ் தன் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார். இதுவும் தற்போது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி விட்டது. இதை உ.பி காங்கிரஸின் தலைவர் அஜய்ராய் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் விமர்சித்துள்ளனர்.

# 5 நாள் நடந்த சுகப்பிரசவத்தில் உ.பி. பெண்ணுக்கு 4 குழந்தை



மொராதாபாத்: உத்தரபிரதேச மாநிலம் சம்பல் மாவட்டம் ஓவரி கிராமத்தைச் சேர்ந்தவர் அமீனா. இவர் பிரசவத்துக்காக லோதிப்பூரில் உள்ள தீர்த்தங்கர் மகாவீர் பல்கலைக்கழக மருத்துவமனையில் கடந்த 9-ம் தேதி சேர்க்கப்பட்டார். கர்ப்ப காலத்தின்போது அவருக்குஸ்கேன்செய்து பார்த்ததில் அவரது வயிற்றில் 4 குழந்தைகள் இருப்பது தெரியவந்தது.

அதனால் மருத்துவர்கள் அதிக எச்சரிக்கையுடன் அவருக்கு பிரசவம் பார்த்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் நாள் இரவே அவருக்கு முதல் குழந்தை சுகப்பிரசவத்தில் பிறந்தது.

அமீனாவுக்கு உடல்நிலை பாதிப்படைந்து இருந்ததால் அவருக்கு சிசேரியன் சிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து கண்காணிப்பில் வைக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த 14-ம் தேதி மேலும் 3 குழந்தைகளை சுகப்பிரசவத்தில் அவர் பெற்றெடுத்தார். அதாவது 5 நாட்களாக நடந்த சுகப்பிரசவத்தில் 4 குழந்தைகளை அவர்பெற்றெடுத்தார்.தற்போது தாயும், 4 குழந்தைகளும் நலமாக உள்ளனர். இதில் 2 குழந்தைகள் ஆண், 2 குழந்தைகள் பெண்.

இதுகுறித்து அமீனாவுக்கு பிரசவம் பார்த்த மருத்துவக் குழுவின் தலைவர் டாக்டர்ஷுப்ராஅகர்வால்கூறும்போது, "இந்த மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் சுகப்பிரசவத்தில் பிறந்தது இதுவே முதல்முறை.

அதிக ரிஸ்க் இருந்தபோதும் அவரை அதிக கவனத்துடன் சிகிச்சை அளித்து குழந்தைகளை சுகப்பிரசவத்திலேயே பெறச் செய்தோம். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 4 குழந்தைகளும் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளன" என்றார்.

# ஈரான் போர் நிறுத்த விவகாரம்: சீன, அமெரிக்க அதிபர்கள் பேச்சு தோல்வி




பெய்ஜிங்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சீன பயணத்தை நிறைவு செய்து பெய்ஜிங்கில் இருந்து நேற்று வாஷிங்டன் சென்றார். சீன அதிபர் ஜி ஜின்பிங் உடன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இருதரப்பு வர்த்தகம், வரி விதிப்பு, தைவான், ஈரான் விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

ஈரானிடம் உள்ள யுரேனியத்தை கைப்பற்ற வேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும். ஈரான் போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது அதிபர் ட்ரம்பின் பிரதான நோக்கங்களாக உள்ளன. இது தொடர்பாக சீன அதிபர் ஜி ஜின்பிங்கிடம் அவர் விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார். ஈரானின் 90 சத வீத கச்சா எண்ணெய்யை சீனா வாங்குகிறது.

ஈரானுக்கு தேவையான ஆயுதங்கள், உணவு தானியங்களை சீனாவே விநியோகித்து வருகிறது. எனவே சீனாவின் நிர்பந்தம் மூலம் ஈரான் போருக்கு தீர்வு காண முடியும் என்று ட்ரம்ப் திட்டமிட்டு இருந்தார். இதுதொடர்பாக சர்வதேச அரசியல் நோக்கர்கள் கூறியதாவது: சீனாவுக்கும் ஈரானுக்கும் மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. மூன்றாம் தரப்பு நாடுகளில் இருந்து ஈரானுக்கு தேவையான ஆயுதங்களை சீனா தொடர்ந்து விநியோகம் செய்து வருகிறது.

மேலும் ஹார்முஸ் ஜல சந்தி தொடர்ந்து ஈரானின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்க வேண்டும் என்று சீனா விரும்புகிறது. இந்த காரணங்களால் சீன அதிபர் ஜி ஜின் பிங் சாதகமான பதில் அளிக்கவில்லை. ஈரானில் போர் நிறுத்தத்தை அமல்படுத்த சமரச முயற்சிகளில் ஈடுபட மட்டுமே சீன அதிபர் உறுதி அளித்திருக்கிறார். சீன, அமெரிக்க அதிபர்கள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்திருக்கிறது. இவ்வாறு சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

# சார் தாம் யாத்திரை 1 மாதத்தில் 12 லட்சம் பக்தர்கள் தரிசனம்



டேராடூன்:
உத்தராகண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள புனிதத் தலங்களான பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி ஆகிய சார் தாம் ஆலயங்களுக்கு இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத வகையில் பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. நடை திறக்கப்பட்ட ஒரே மாதத்திற்குள் 12.62 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.

தற்போது நாளொன்றுக்கு சுமார் 70,000 முதல் 80,000 பக்தர்கள் மலைக் கோயில்களுக்கு வருகை தருகின்றனர். இந்த யாத்திரையின் போது இதுவரை 40 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். இவை அனைத்தும் மாரடைப்பு உள்ளிட்ட காரணங்களால் நிகழ்ந்தவை.

இந்த ஆண்டு முதல் முறையாக பத்ரிநாத், கேதார்நாத் மற்றும் கங்கோத்ரி ஆகிய 3 ஆலயங்களுக்குள் இந்துக்கள் அல்லாதோர் நுழைவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மாற்று மதத்தினர் ஆலயத்திற்குள் நுழைய விரும்பினால், அவர்கள் சனாதன தர்மத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் என பத்ரிநாத்-கேதார்நாத் கோயில் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சார் தாம் யாத்திரையில் மொத்தம் 50 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# டாஸ்மாக் கடைகளை மூட கால அவகாசம் வேண்டும்: கட்டிட உரிமையாளர்கள் போராட்டம்




சென்னை : டாஸ்மாக் கடைகள் மூட உரிய கால அவகாசம் வழங்க வலியுறுத்தி, பார் உரிமையாளர்கள், பார் கட்டிட உரிமையாளர்கள் நிர்வாக இயக்குநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் இருக்கும் 717 மதுக்கடைகளை 2 வாரங்களில் மூட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து அந்த கடைகள் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன.

இதனிடையே 2 வாரங்களுக்குள் கடைகளை காலி செய்வது சாத்தியமில்லை என்றும் உரிய கால அவகாசமும், உரிமையாளர்கள், பணியாளர்கள் போதிய மாற்று ஏற்பாடுகளை வழங்க வலியுறுத்தியும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை சேர்ந்த பார் உரிமையாளர்கள், கட்டிட உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சென்னை எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமையகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் தமிழகம் முழுவதும் உள்ள 2,700 பார்களையும் மூடிதங்களது எதிர்ப்பை தெரிவித்தனர். இதுகுறித்து தமிழ்நாடு டாஸ்மாக் பார் உரிமையாளர்கள், பார் கட்டிட உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலச் சங்க மாநில தலைவர் என்.அன்பரசன் கூறியதாவது: தமிழகத்தில் பள்ளி, கோயில், பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் உள்ள 717 கடைகள் மூடப்படுவதாக தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.


ஆனால் சட்ட விதிப்படிதான் தற்போதைய மது பானக் கடைகள் இயங்கி வருகின்றன உச்ச நீதிமன்றம் 50 மீட்டர் என கூறியிருக்கும் நிலையில் 500 மீட்டர் என கூறியிருப்பதால் எந்த மதுபானக் கடைகளும் இயங்க முடியாத சூழல் உருவாகும் என்பதை தமிழக முதல்வருக்கு அதிகாரிகள் எடுத்துக்கூற வேண்டும்.

தற்போது இயங்கி வரும் 717 மதுபானக் கடைகளும் சட்ட விதிமுறைக்குட்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது பொறுப்பேற்ற புதிய அரசு, ஊழியர்களின் வாழ்வாதாரத்தை பற்றி கவலைப்படாமல் இது போன்ற செயல்களை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசுக்கு எங்கள் கோரிக்கையாக மதுக்கடைகளை மூட கால அவகாசம் வழங்க வேண்டும், இல்லையென்றால் தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மதுபானக் கடைகளையும் மூட வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே சங்க பிரதிநிதிகளை நிர்வாகஇயக்குநர்நேற்று மாலை அழைத்துப் பேசிகோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து மாலை முதல் பார்கள் மீண்டும் திறக்கப்பட்டன.

# ஓமனில் இந்தியக் கொடி ஏந்திய வணிகக் கப்பல் மீது தாக்குதல்


புதுடெல்லி: ஓமன் கடற்கரை அருகே இந்தியக்கொடி ஏந்திய வணிகக்கப்பல் ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.



இது குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஓமன் கடற்கரை அருகே இந்தியக் கொடி ஏந்திய வணிகக் கப்பல் மீது புதன்கிழமை அன்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியது யார் என்பது உடனடியாகத் தெரியவில்லை. இந்தத் தாக்குதல் ஏற்றுக்கொள்ள முடியாதது. வணிகக் கப்பல்கள் மற்றும் மாலுமிகள் தொடர்ந்து இலக்கு வைக்கப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேநேரம் அந்தக் கப்பலில் இருந்த அனைத்து இந்திய ஊழியர்களும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களை மீட்ட ஓமன் அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். வணிகக்கப்பல்களை இலக்கு வைப்பது, அப்பாவி ஊழியர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பது அல்லது கப்பல் போக்குவரத்து மற்றும் வணிகச் சுதந்திரத்தைத் தடுப்பது போன்ற செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சனாதனத்தை சாதிக்குள் அடைக்க முயற்சி: தமிழக பாஜக குற்றச்சாட்டு



சென்னை: சனாதனத்தை சாதிக்குள் அடைக்க முயற்சி நடப்பதாக தமிழக பாஜக தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வட இந்தியாவில் சனாதனம் என்றால் இந்து. தென் இந்தியாவில் சனாதனம் என்றால் சமத்துவமின்மை என்கிறார் தவெகவின் ஆதவ் அர்ஜுனா. அவர் இப்படி சொல்லியிருப்பது அவரது அறியாமையால் அல்ல. இந்து மதத்தின் மீது அவருக்கு இருக்கும் வெறுப்பினாலும், பிரிவினை மனப்பான்மையினாலும்தான். சாதி ஏற்றத் தாழ்வுகள் எல்லா மதத்திலும் உள்ளன. அவற்றை சீர் திருத்த வேண்டுமேயன்றி வெறுப்பை உமிழ்வது தவறு.

சமத்துவத்தை அறிய வேண்டுமெனில் ராமானுஜரை, பாரதியாரை, ராஜாஜியை படியுங்கள். அதைவிடுத்து உதயநிதி ஸ்டாலின் கூறியதை வேறு வார்த்தைகளில் திரும்பக்கூறி சாதிப் பிளவுகளை, பிரிவினையை பேசுகிறீர்கள் என்பதே உண்மை. சனாதனம் என்பது தமிழகத்தின் ஆன்மா என்பதை அறிந்து கொள்ளுங்கள். வேதம், உபநிதம், திருக்குறள், தேவாரம், திவ்யப் பிரபந்தம், ராமாயணம், மகாபாரதம் அனைத்துமே சனாதனத்தின் அங்கம்.

காஞ்சி, ராமேசுவரம், ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை, திருப்பதி இவை அனைத்துமே சனாதனத்தின் உயிர் நாடி. இந்துத்துவாவை எதிர்க்கிறோம் என்று கூறிக்கொண்டு இந்துக்களை எதிர்க்கிறீர்கள், பழிக்கிறீர்கள், அவமானப்படுத்துகிறீர்கள். 90 சதவீத தமிழர்கள் பின்பற்றும் இந்து மதத்தை, சனாதனத்தை சாதிக்குள் அடைக்கப் பார்க்கிறீர்கள். சனாதனத்தை யாராலும் ஒழிக்க முடியாது. உங்கள் இந்து விரோத அரசியல்தான் ஒழிந்து போகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நீக்கப்பட்ட நிர்வாகிகள் அதே பொறுப்பில் தொடர்வார்கள்: வேலுமணி, நத்தம் விஸ்வநாதன் கூட்டாக அறிக்கை



சென்னை: 'அதிமுகவில் இருந்து நிர்வாகிகளை நீக்கிய பழனிசாமியின் அறிவிப்பு செல்லாது. நீக்கப்பட்டவர்கள் அவரவர் பொறுப்புகளில் தொடர்வார்கள்' என அக்கட்சியின் தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி வேலுமணி, துணை பொதுச் செயலாளர் நத்தம் விஸ்வநாதன் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அதிமுக இன்று தனிப்பட்ட சுய லாபத்துக்காகவும், பதவி வெறிக்காகவும் செயல்படும் ஒருசிலரால் இந்த எஃகுக் கோட்டையின் அடித்தளம் அசைத்துப் பார்க்கப்படுகிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தோல்வியை சந்தித்தது.

பெரும்பான்மையான சட்டப்பேரவை உறுப்பினர்களும், முக்கிய நிர்வாகிகளும் பொதுச்செயலாளர் பழனிசாமியைச் சந்தித்து, அவரது தன்னிச்சையான முடிவுகளால் தான் இந்தத் தோல்வி நேர்ந்தது என்று கூறி, தோல்விக்கான காரணத்தை ஆராய அவசர பொதுக்குழு மற்றும் செயற்குழுவைக் கூட்ட வலியுறுத்தினோம். முக்கியமாக திமுகவுடன் கூட்டணி வேண்டாம் என்றும் வலியுறுத்தினோம்.

இதற்கு பொதுச் செயலாளர் உடன்படாததால் கருத்து வேறுபாடு தொடங்கியது. கடந்த 11-ம் தேதி அன்று பழனிசாமி, தற்காலிக பேரவைத் தலைவரை சந்தித்து 17 சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆதரவு இருப்பதாக மனு அளித்ததன் மூலம் இந்தப் பிளவு பொதுவெளியில் தெரிந்தது. அதனால், 30 உறுப்பினர்கள் எங்கள் தரப்பு ஆதரவுக் கடிதத்தை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கட்சியின் முன்னோடிகள் உள்ளிட்ட 28 பேரை ஒரே கையெழுத்தில் நீக்கி பழனிசாமி அறிவித்துள்ளார். தேர்தல் ஆணையம் மற்றும் நீதிமன்ற சட்டப்படி, ஒரு இயக்கத்தில் பிளவு ஏற்பட்ட நிலையில், ஒருவரை நீக்கவோ அல்லது சேர்க்கவோ இரு பிரிவினருக்கும் அதிகாரம் கிடையாது.

கடந்த 2017-ம் ஆண்டிலும் இதேபோன்ற அறிவிப்புகள் செல்லாது என்று நீதிமன்றத்தாலும், தேர்தல் ஆணையத்தாலும் அறிவிக்கப்பட்டது. எனவே, பழனிசாமி வெளியிட்ட பதவி நீக்க அறிவிப்புகள் செல்லாது. நீக்கப்பட்டவர்கள், அவர்கள் வகித்த அதே பொறுப்புகளில் தொடர்வார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எஸ்.பி.வேலுமணி வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில் கூறியிருப்பதாவது: அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, உண்மை நிலையை இந்த நேரத்திலும் உணராமல் அறிக்கை விட்டிருப்பது என்பது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. தங்களின் வார்த்தைகளை, தம்பிகளாக நாங்களும் ஏற்றுக்கொண்டு செயல்பட்டோம். ஆனால் தோல்வி வந்த பிறகு, தலைமை பொறுப்பில் இருப்பவர் இறங்கி வந்து எல்லோரிடமும் பேச முன் வந்திருக்க வேண்டும். அதை விடுத்து எப்போதும் போல 'நான் மட்டுமே எல்லாம்' என்ற நிலையில் பேசிக்கொண்டிருப்பதை உணர்வுள்ள எந்த அதிமுக தொண்டனும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

மக்கள் ஆதரவு பெற்ற தவெக அரசுக்கு ஆதரவு அளிப்பது என்ற அரசியல் அறத்தோடு அதிமுகவின் ஆதரவை பெரும்பான்மை சட்டப்பேரவை உறுப்பினர்கள் வழங்கியுள்ளோமே தவிர, யாரையும் அவமரியாதை செய்யும் எண்ணமோ, அதிமுகவை பிரிக்கும் எண்ணமோ எங்கள் யாருக்கும் இல்லை. இப்போதும் நீங்கள் அழைத்தால், பேச நாங்கள் தயார்.

தோல்விக்கான காரணங்களை எல்லோரும் சேர்ந்து ஆராய்வோம். அதிமுகவின் எதிர்காலப் பாதையை அனைவரும் ஒன்றிணைந்து தீர்மானிப்போம். தங்களிடம் நாங்கள் கேட்பது ஒன்றுதான். 'போங்க போங்க' என்று எப்போதும் போல விரட்டியடிக்காமல், 'வாங்க வாங்க' என்று ஒருமுறை அழைத்து பாருங்கள். எல்லாமே மாறும்.. கட்சியும் நல்லா இருக்கும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முதல்வர் விஜய் குரல் கொடுக்க வேண்டும் இலங்கை எம்.பி. ராமநாதன் அர்ஜுனன் பேட்டி




சென்னை: தமிழக முதலமைச்சர் விஜய், இலங்கை தமிழர்களின் போராட்டம் மற்றும் தமிழ் ஈழ மக்கள் தொடர்பான பிரச்சனைகளில் ஆழமாக சிந்தித்து, ஆறுதலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ஜுனன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகம் வந்துள்ள இலங்கை எம்.பி. ராமநாதன் அர்ஜுனன், சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், "என் வாழ்க்கையில் இரண்டாவது முறையாக தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறேன். தமிழ் பேசுகிறோம் என்ற ஒரே காரணத்திற்காக எங்கள் இனத்தைச் சேர்ந்த 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இலங்கையில் இனப்படுகொலை செய்யப்பட்டது, இந்த மாதத்தில் தான்.

இந்த மாதத்தில் தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் நான், தமிழ் மக்களின் வலிகளை உலகெங்கும் உள்ள உறவுகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டிய தேவை உள்ளது. அதனால் நான் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறேன்.

உண்மையிலேயே முதல்வர் விஜய் மற்றும் அவருடைய அமைச்சர்களை சந்திப்பேன் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. அவர் முதல்வராக பதவியேற்ற நாளில் நான் இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்தேன்.

எங்கள் இனத்திற்காக போராடிய குட்டிமணி, தங்கதுரை ஆகியோர் சிறையில் கொலை செய்யப்படுவதற்கு முன், இந்த கண்களை தோண்டினால் அதை இன்னொரு தமிழனிடம் கொடுத்து விடுங்கள். அந்த தமிழனின் வழியாக சுதந்திர தமிழ் இனத்தை நாங்கள் பார்க்க விரும்புகிறோம் என கூறியிருந்தனர்.

தமிழ்நாட்டு மக்கள் வரலாறு காணாத மிகப் பெரிய மாற்றத்திற்கு வாக்களித்திருக்கிறார்கள். இந்த மாற்றத்தை தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே நான் இலங்கையில் கூறியிருந்தேன். உண்மையாகவே எதார்த்த அரசியலை வழி நடத்தும் மக்கள் ஜனநாயகனான முதலமைச்சர் விஜய்யின் சேவை தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் பேசும் ஒவ்வொருவருக்கும் முக்கியமானது.

குறிப்பாக 40 ஆண்டு காலம் போராடி, சிதைக்கப்பட்டு, மண்ணில் புதைக்கப்பட்ட ஈழ விடுதலை இனத்திற்காக தமிழக முதல்வர் விஜய்யின் குரல் மிகவும் அவசியமானது. தமிழ் ஈழ மக்களின் சார்பில் தமிழக முதல்வர் விஜய்க்கு வைக்கப்படும் வேண்டுகோள் என்னவென்றால், உங்கள் குரலும், உங்கள் நியாயமான நடவடிக்கைகளும் அவசரப்படாமல் ஆழமாக யோசித்து, ஆறுதல் தரும் வகையில் இருக்க வேண்டும் என்பது தான்.

தமிழ்நாட்டில் இதற்கு முன்பு ஆட்சி செய்த அரசுகள், இலங்கையில் எங்கள் இனம் அழிக்கப்படும் போது அதை வேடிக்கை பார்த்ததை நான் பார்த்திருக்கிறேன். அந்த நேரத்தில் தற்போதைய முதல்வர் விஜய் எங்களுக்காக உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொண்டார். அவர் மட்டுமல்ல, பல அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்காக குரல்கொடுத்தார்கள்.

ஆனால் எங்கள் வலிகளை தற்போது பலர், குறிப்பாக நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சீமான் உள்ளிட்ட சிலர், தமிழ்நாட்டு அரசியலில் வாக்கு பெறுவதற்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள்" என்றார் அவர்.

# நீட் தேர்வுக்கு எதிராக போராடும் மாணவர்கள் மீது அடக்குமுறையை ஏவுவதா? திமுக மாணவரணி கண்டனம்



சென்னை: நீட் தேர்வுக்கு எதிராக போராட்டம் நடத்திய இந்திய மாணவர் சங்கத்தினரை காவல் துறை தாக்கியதற்கு திமுக மாணவரணி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் திமுக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் இன்று செய்தியாளர்களை சந்தித்தார்.


அப்போது அவர், "இந்தியாவில் நீட் தேர்வுக்கு எதிராக முதல் கொடுத்தவர் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின். தொடர்ந்து நீட் தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் குளறுபடிகள் ஏற்பட்டு வருகின்றன.


தொடக்கத்தில் இருந்து திமுக நீட்டுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்து வருகிறது. 2024 ஆம் ஆண்டு நீட் தேர்வில் பண பரிவர்த்தனைகள் நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டு அது அம்பலப்படுத்தப்பட்டது. நீட் தேர்வில் வினாத் தாள் வெளியாகி இருப்பதாக கூறி தற்போது நடைபெற்று முடிந்த நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

நீட் தேர்வின் மூலம் தகுதியான மருத்துவர்களை தருகிறோம் என்று கூறி விட்டு, நீட் தேர்வின் மூலம் பணம் சம்பாதிப்பதும், ஏழை எளிய குடும்பத்தில் இருந்து மருத்துவர்கள் உருவாக கூடாது என்பதற்காக, மத்திய அரசு செய்யும் போலியான நாடகங்களை தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் வெளி கொண்டு வந்துள்ளார். நடந்து முடிந்த நீட் தேர்வு மட்டும் ரத்தானது மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தமாக நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்.

நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் நேற்று முன்தினம் நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவனில் நடைபெற்ற போராட்டத்தில், ஈடுபட்ட இந்திய மாணவர் சங்கத்தினர் தாக்கப்பட்டதற்கு திமுக மாணவரணி தமிழக காவல் துறையை வன்மையாக கண்டிக்கிறது. தொடர்ந்து இதே போல் மாணவர்கள் மீது தாக்குதலை தவெக அரசு நடத்தினால், இதற்கு எதிராக திமுக சார்பில் கடுமையான ஆர்ப்பாட்டம், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வழியில் நடத்துவோம். நீட் தேர்வு என்பது ஒரு போர்ஜரி, அதில் உண்மைத் தன்மை இல்லை. தனியார் பயிற்சி நிறுவனங்களுக்கு வருமானத்தை ஈட்டி தரக் கூடிய ஒன்று தான் நீட் தேர்வு என்று திமுக தொடர்ந்து சொல்லி வருகிறது. தற்போது வினாத் தாள் கசிவு மூலம் நீட் தேர்வின் குட்டு வெளிப்பட்டுவிட்டது. நீட் தேர்வுக்கு எதிராக போராடும் மாணவர்கள் மீண்டும் பாதிக்கப்பட்டால் தமிழகம் முழுவதும் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை திமுக முன்னெடுக்கும்" என தெரிவித்தார்.

# 'Darling, leaked paper for you, come over': Viral clip reveals how Lucknow University professor harassed female student





*A Lucknow University assistant professor was arrested Friday night after audio clips of him allegedly pressing a female student to "meet" him went viral. Paramjeet Singh, a teacher in the Zoology Department, has been accused of harassing the student and attempting to lure her with promises of leaked exam papers. The controversy erupted after three audio recordings circulated on social media. In the nearly two-minute clip, the faculty member is allegedly heard asking the student about her mother's health before offering to help.*

*"Alright, if you need any kind of help, not just for that, but otherwise too, I know ten to twelve doctors. Okay, darling? If you say so, I will definitely come today. If you need any financial support or any other support, everything is open for you," the man said.*

*The student was heard saying, "No sir, there is no such problem, sir. It will be managed. It is not that big of an issue, it will be done." The conversation then went towards university exams, with the man claiming to have leaked the papers for her elective and core subjects. "So, which day are you coming to meet me, after your exams are over. I have leaked both of your exam papers," he says. When the student reportedly responded that she had already prepared for the examinations and could not leave home because of responsibilities there, the man allegedly continued insisting she meet him.*

*"I have leaked both papers for you," he said. "No-no, you come over. I will leak the paper for you, yaar. I have the entire paper with me. So, you come over," the man was heard saying.*

*After she repeatedly refused, the man said, "So you won't meet me even once? Then tell me, when will you meet me? You'll have to come someday. Fine then, come within seven days, okay?"*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.